திருச்சிற்றம்பலம்

# திருமயிலை உவமை வெண்பா


பதிப்பாளர்

கோ. முத்தமிழ்மாறன்

நெறியாளர்

முனைவர் ய.மணிகண்டன்

விரிவுரையாளர்



தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

மே - 2006

திருச்சிற்றம்பலம்

# திருமயிலை உவமை வெண்பா


பதிப்பாளர்

**கோ. முத்தமிழ்மாறன், எம்.ஏ.,**

நெறியாளர்

**முனைவர் ய. மணிகண்டன்**

விரிவுரையாளர்


★★★★★


**தமிழ் இலக்கியத்துறை**

**சென்னைப் பல்கலைக்கழகம்**

**சென்னை - 600 005.**

**மே 2006**

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
பதிவு எண்:43010514

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'திருச்சிற்றம்பலம் திருமயிலை உவமை வெண்பா'** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக **கோ. முத்தமிழ்மாறன்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர் தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**முனைவர் ய. மணிகண்டன்**

நாள் :
இடம்: சென்னை -5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**கோ. முத்தமிழ்மாறன்**
கலையியல் நிறைஞர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'சுவடியியலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'திருச்சிற்றம்பலம் திருமயிலை உவமை வெண்பா'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

**கோ. முத்தமிழ்மாறன்**

நாள் :
இடம்: சென்னை -5.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | I - II |
| பதிப்புரை | III-X |
| திருமயிலை உவமை வெண்பா | 1-33 |
| i. முதற்குறிப்பு அகராதி | 34-37 |
| ii. சொல்லடைவு | 38-59 |
| துணைநூற்பட்டியல் | 60 |

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் முதுகலை படிக்க வாய்ப்பளித்த பேராசிரியர் வ.ஜெயதேவன் அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் சுவடியியலும் மற்றும் பதிப்பியலும் பட்டயச் சான்றிதழ் படிப்பு படிக்க வாய்ப்பளித்தமைக்கும், சுவடியியல் பட்ட பயிற்சி வகுப்பில் பதிப்புகளைப் பற்றிச் சிறப்பான முறையில் பயிற்சி கொடுத்த பேராசிரியர் வீ.அரசு அவர்களுக்கு என் நன்றியை சமர்ப்பிக்கிறேன் மற்றும் சுவடியை படிக்கவும் எழுதவும் கற்றுகொடுத்து நெறியாளராக நின்று என்னை வழி நடத்திய முனைவர் ய.மணிகண்டன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சென்னைப் பல்கலைக்கழக அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகத்திலிருந்து எனக்கு சுவடியை பதிப்பிக்க வழங்கிய நூலகக் காப்பாட்சியர் முனைவர் மு. சவுந்திரபாண்டியன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் மீது அன்பும் அக்கரையும் கொண்டு என் உயர்வுக்கு வழிகாட்டியாக இருக்கும் முனைவர் அ.பாலு, துளசிபாலன், சந்திரபாபு அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ஈன்று புறந்தருதலை மட்டும் கடனாக கொள்ளாமல் என்னைச் சான்றோனாக்கிய என் தாய் கோ.விஜயசரஸ்வதி அவர்களுக்கும், சான்றோனாக்குவதை மட்டும் கடனாகக் கொள்ளாமல் என்னை இவ் உலகிற்கு நல்வழிப்பாதையில் நடத்திச் சென்று தாய் மண்ணுக்கும் தாய் மொழிக்கும் சிறந்தவனாக ஆக்கிய என் தந்தை மு.கோவிந்தசாமி அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

நான் கல்வியில் மேன்மேலும் பயின்றுவர உறுதுணையாக இருக்கும் என் அண்ணன்கள், கோ.ஜெகநாதன், கோ. முரளி, கோ.சரவண சுகுந்த குமார் என் தம்பி கோ.விஜயசாரதி அவர்களுக்கும் என் நன்றியை தெரிவிக்கின்றேன்.

எனக்கு அவ்வவ்போது ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து பொருள் உதவி அளித்து முதுகலை பயில துணையாய் நின்ற எனது அக்கா,கே. செல்வம், மாமா என். ஜானகிராமன், கோ.கீத்தா தேவி மாமா தேவராஜ் மற்றும் கோ.வேதாண்டீஸ்வரி மாமா கோ.வெங்கடேசன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

நான் சுவடியினை பதிப்பிக்க உதவிபுரிந்த நண்பர்கள் இரா. அன்பழகன், எ. கலிவரதன், உ. உதயகுமார், மு. தேவராஜ் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோ. முத்தமிழ்மாறன்

# பதிப்புரை

தமிழ் மொழியை "பக்தியின் மொழி" என்று தனிநாயகம் அடிகள் அவர்கள் சொல்கிறார். சங்ககாலம் முதல் பிற்காலம் வரை தமிழ் மொழியில் பக்தி இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து திளைத்திருக்கின்றன. நாயன்மார்கள் எழுதிய சைவ நூல்கள் பன்னிரு திருமுறைகளாகவும் ஆழ்வார் பாடல்கள் நாலாயிர திவ்வியபிரபந்தமாகவும் தொகுத்து வழங்கப்பட்டு உள்ளன. இவ்வாறு பக்திப் பாடல்கள் தோன்ற காரணம் இறைவன் மீது அவர்கள் கொண்ட பக்தியால் பாடப்பட்ட பாடல்களே பக்தி பாடல்கள் எனப்படும்.

தமிழ் இலக்கியப் பதிப்பு வரலாற்றில் சங்க இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படை என்னும் நூலே முதன் முதலில் ஓலைச் சுவடியிலிருந்து அச்சாக பதிப்பித்து வெளியிட்டவர் ஆறுமுகநாவலர் ஆவர். இவர் இதை பதிப்பித்ததற்க்கு முக்கிய காரணம். இது சைவம் சார்ந்த சமய நூல் என்பதே ஆகும். எனவே பக்தி இலக்கியம் சங்க காலம் முதலே செல்வாக்கு பெற்றிருக்கின்றன என்பதை அறியலாம்.

ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து பதிப்புப் பணியில் சிறந்து விளங்கியவர்கள் சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர் ஆகியோர் ஆவார். இவர்கள் எல்லாம் தொடக்க காலகட்டத்தில் சுவடிகளை தேடி வீடு வீடாக சென்று அவைகளை வாங்கிப் பிரித்து அவைகள் என்ன எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் கிரந்த எழுத்து முறையிலா, வட்டு எழுத்து முறையிலா எந்த காலகட்டத்தில்

யாரால் எதைப்பற்றி எழுதப்பட்டது என்பதை எல்லாம் கண்டறிந்து பல நூல்களைப் பதிப்பித்துக் கொடுத்து தமிழுலகிற்குப் பெரும் தொண்டு செய்துள்ளனர். இவர்கள் வரிசையில் நானும் பதிப்பு பணியில் ஈடுபட்டு இப்பதிப்பினை அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

## சுவடியை பற்றி

ஒலைச் சுவடிகள் பெரும்பாலும் மடங்கள் கோயில்கள் கருவறைகள், அரண்மனைகள் என்று பலவிடங்களில் வைத்துப் பாதுகாத்து வந்தனா். சுவடிப் பதிப்புப் பணிக்குப் பின் சுவடிகளை எல்லாம் மிகவும் பாதுகாக்கப்பட்ட வேண்டும் என்னும் எண்ணமும் ஊக்கமும் கொண்டு அவைகளை நூல்களாக வெளியிட வேண்டும் என்று பாதுகாத்து வந்தனா். சுவடிகளைப் பாதுகாக்க அந்தந்தக் காலகட்டத்தில் அரசும் அரசு சாா்ந்த நிறுவனங்களும் அரசு சாராத நிறுவனங்களும் பலவழிகளிலும் செயல்பட்டு வந்தன. இவ்வகையில் சென்னை அரசினா் கீழ்த்திசை சுவடியியல் நூலகமும் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

சுவடிகள் படைப்புகள் வழியாக அவைகள் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், கலை, சித்தா் முதலிய வடிவங்களில் காணப்படுகின்றன. இவ்கைச் சுவடிகளில் நான் பதிபிக்க எடுத்த சுவடி சைவ சமயம் சாா்ந்த பக்தி சுவடி. இச் சுவடியியல் மயிலாப்பூரில் எழுந்தருளி உள்ள சிவபெருமானின் பெருமைகளைப்பற்றிப் பேசப்படுகின்றது.

## பெயர்காரணம்

மயிலைக் கபாலீச்சுரம் என்னும் இத்தலம் சென்னை மயிலாப்பூரில் இருக்கிறது. இத்திருத்தலம் பழம் பெருமை வாய்ந்தது மயிலாப்பூர் என்று தற்காலத்தில் கூறப்பெறும். இத்தலம் மயிலாப்பு என முன்பு வழங்கப்பட்டது. இது தேவாரம் பெற்ற திருத்தலமாகும்.

கபாலீசுவரர் கோயிலுக்கு அம்பிகை கற்பகவல்லித் தாயாரால் தான் சிறப்பு. அன்னை மயில் உருக்கொண்டு சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்ததால் இது மயிலை என்றும் மயிலாப்பூர் என்றும் வழங்கப்படுகிறது. இதை விளக்கும் சிற்பம் ஒன்று இக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. கற்பகாம்பிகை பூசித்த செய்தியை திருஞான சம்பந்தர் "மாட்டிட்ட புன்னையுங் கானன் மடமாடலைக் கட்டிடங் கொண்டான் காபலீச் சரமமர்ந்தான்" எனறு பாடியுள்ளார்.

மயிலாகத் தன்னை நோக்கி தவம் புரியும் அன்னைக்கு இறைவன் கையில் கபாலத்துடன் தரிசனம் தந்து ஆட்கொண்டதால் இக்கோயில் கபாலீச்சரம் என்ற பெயர் பெற்றது.

இத்தலத்தில்தான் அறுபத்து மூவர் நாயனார்களில் ஒருவரான வாயிலார் நாயனாரும் வைணவ ஆழ்வார்களில் முதல்வரான பேயாழ்வாரும் இவ்வூரில் பிறந்தார்கள்.

சமண சமயத்தைச் சார்ந்த நேமிநாதரும் இங்கு இருந்தவர்தான். இவர் நேமிநாதம் என்ற நூலை எழுதினார்.

இவருக்கு இங்கு ஒரு கோவில் இருந்ததாகவும் பிறகு அதை எடுத்து சென்று சித்தாமூர் என்ற இடத்திலுள்ள சைனர் கோயிலில் பிரதிட்டை செய்ததாகவும் கூறப்படுகிறது. எனவே மயிலாப்பூர் சைவ, வைணவ, சைனர்களுக்கு சமரச உறைவிடமாகத் திகழ்ந்திருக்கிறது.

மசுதான் சாகிபு என்பவர் வேதாந்த சாரமான பாடல்களை பாடியிருக்கிறார். இவரும் மயிலையை சேர்ந்தவர் எனத் தெரிகிறது.

செயின்ட் தாமசு என்ற கிறித்துவப் பெரியாரின் கல்லறை இங்கு கானப்படுகிறது. இவர் கல்லறையைச் சுற்றியுள்ள இடம் சாந்தோம் என அழைக்கப்படுகிறது.

வெகுகாலத்துக்கு முன் சிவநேசர் என்னும் ஒரு வைசியர் மயிலையில் வசித்து வந்த இவர் மகள் பூம்பாவாய் ஆவள். சிவனேசர் ஞானசம்பந்தரின் புகழை அறிந்து தன் மகளை அவருக்கு மணம் முடித்துந்த விரும்பி மிகுந்த கட்டுப்பாடுகளுடன் வளர்த்தார். ஆனால் பூம்பாவையை நந்தவனத்தில் ஒரு நாகம் தீண்ட, இறந்துவிட்டாள். சிவநேசர் அவள் உடலைத் தகனம் செய்தபின் அவள் அத்தியையும் சாம்பலையும் ஒரு இடத்தில் போட்டு பாதுகாத்து வந்தார்.

சம்பந்தர் சிவத்தலங்களை தரிசனம் செய்துகொண்டு திருவெற்றியூருக்கு வந்தார். சிவநேகர் அங்குச்சென்று சம்பந்தரிடம் நடந்த வரலாற்கைக் கூறி மயிலைக்கு அழைத்துவந்தார். சம்பந்தர் கபாலீ கோயிலுக்குவர பூம்பாவையின் அத்திகள் கொண்ட குடத்தையும் அங்குக் கொண்டு வந்தார். சம்பந்தர் இறைவனை நினைத்து.

"மட்டிட்ட புன்னையுங் கானல் மடமயிலை" என்ற பாடலைத் தொடர்ந்து பதினோரு பதிகங்கள் பாடினார். பின் குடத்தின் உள்ளிருந்து அழகிய பூம்பாவை வெளியே வந்தாள். அவளுக்கு தான் உயிர் ஊட்டிய காரணத்தினால் தனக்கு அவள் மகளாகிறாள் என்று கூறி அவளை மணக்க இயலாததைக் கூறுகிறார். பூம்பாவையும் கன்னிமடத்தில் சேர்ந்தாள். சிவனை நினைத்து தியானம் செய்து முக்தி அடைந்தால். இச்சம்பவம் இத்திருத்தலத்தில் நடந்தது.

சுந்தரர் இறைவனை நோக்கி முதலையுண்ட பாலனின் உயிரைத் தரும்படி காலனிடம் ஆணையிடக் கூறி பதிகம்பாடி முதலை வாயிலிருந்து பாலகனின் உயிர்பெற்று தருகிறார். இச்சம்பவமும் இத்தலத்தில்தான் நடந்தது.

இத்திருத்தலத்தில் உள்ள இறைவனின் திருப்பெயர் கபாலீச்சுரர் என்றும் தேவியின் திருப்பெயர் கற்பகாம்பிகை என்றும் கூறப்படுகிறது. கோயிலுக்கு இயற்கை தெப்பக்குளமும் அதன் நடுவில் நிராழி மண்டபமும் உள்ளன. கோயில் கோபுரம் ஏழு மடங்களுடன் அழகிய காட்சியாக அமைந்துள்ளது.

கோயில் கிழக்கு நோக்கியும், இறைவன் மேற்கு நோக்கியும் எழுந்தருளியிருக்கிறார். அன்னை கற்பகாம்பிகை தனிச் சந்நிதி கொண்டுள்ளார். மேலும் வாயிலார், சம்பந்தர், பூம்பாவை இவர்களுக்கும் தனிச் சந்நிதிகள் கொண்டு இத்திருத்தலம் சிறந்து விளக்குகின்றன.

## ஆசிரியர் வரலாறு

திருச்சிற்றம்பலம் திருமயிலை உவமை வெண்பா என்னும் இந்நூல் சுவடியில் 9-5-34ஆம் ஆண்டு என எழுதப்பட்டு

உள்ளது. இந்நூலை திருநெல்வேலி நடலிங்க கவிராசர் என்பவரால் பாடப்பெற்று என்று மூலப் பிரதியின் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பற்றிய வரலாறும் ஆசிரியர் பற்றிய வரலாறும் தெரியவில்லை.

## சுவடி அமைப்பு

திருச்சிற்றம்பலம் "திருமயிலை உவமை வெண்பா" என்னும் இந்நூலின் முதற்பாடல் வினாயகனைப் பற்றிய காப்புச் செய்யுள் ஒன்றும் இச்செய்யுளின் முதலடியாக பூமகன் மகிழ்மயிலை என தொடங்கி நூலின் இறுதியடியில் வல்லார் சுகம் பெறுவர் என முடிக்கப்பட்டு இருக்கின்றது. இஃது மயிலைப் பதிக்கும் மன்மதன், தாமரைப்பூ, வேதம், முதலான பலபொருட்கள் உவமை அமையுமாறு பாடப்பெற்றுள்ளது. இச்சுவடி வெண்பாவால் எழுதப்பட்டு உள்ளது. இதன் ஒவ்வொரு பாடலிலும் நான்கு அடிகள் பெற்றும் முதல் மூன்று அடிகளில் நான்கு சீர்களும் நான்காம் அடியில் மூன்று சீர்களும் பெற்று காணப்படுகின்றன. இச்சுவடியில் பக்கத்திற்கு ஐந்து பாடல்கள் வீதம் பதிமூன்று சுவடிகளில் நூற்று முப்பது பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்கள் முழுமையும் மயிலாப்பூரில் உள்ள சிவபெருமானின் பெருமைகளைப் பற்றி பேசப்படுகின்ற ஒரு சைவ சமயம் சார்ந்த நூலாகும்.

## நூலின் சிறப்புக்கள்

திருமயிலை உவமை வெண்பாவில் முதற்பாடலாக கடவுள் வணக்கச் செய்யுளாகக் கூத்தாடும் பிள்ளையாரை பற்றியன.

**"கூத்த விநாயகனுங் கும்பமுலை யாரிருவர்**
**காத்த விநாயகனுங் காப்பு"** (காப்பு பாடல்)

என்று விநாயகனை முதற்தெய்வமாக கொண்டு காப்புச் செய்யுள் இயற்றப்பட்டுப் பின் நூல் எழுதப்பட்டு உள்ளது. இந்நூலில் மயிலாப்பூரில் எழுந்தருளி உள்ள இறைவன் திருநாமம் கபாலீசர் என்பதற்கு,

**"கருத்தன் மருவு காபல னென்றுங்"** பாடல்-6

பாடப்பட்டு உள்ளது. இதே போன்று அம்பிகையின் பெயர் கற்பக வல்லி என்பதற்கு,

**"வளைசுரமுங் கற்பக வல்லியுஞ்சேர் பண்பாலத்**
**தளைமயிலை"** - பாடல்.7

என்று அம்பிகையின் பெயரையும் பாடப்பெற்று உள்ளது.

தலவிருட்சம் புன்னை என்பதற்கும்

**"புன்னை வளர் மயிலாப்பூர்"** பாடல் 67

இவைபோன்று பல செய்திகள் இந்நூலில் சொல்லப்பட்டு உள்ளது.

இத்தனைச் சிறப்புக்கள் வாய்ந்த இப்பழம்பெரும் பகுதியில்தான் பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் வாசுகியம்மையுடன் இத்திருத்தல ஊரில் வாழ்ந்திருக்கிறார் என்பதற்கு திருவள்ளுவர் ஆலயம் இத்தலத்தில் உள்ளது என்னும் இச்செய்தியைக் குறிக்கும் பாடல்,

**"வள்ளுவரின் சொல்வளமே வாய்த்த"** பாடல்-4

என்று வள்ளுவர் வாழ்ந்தார் என்பதற்கான சான்று சொல்லப்படுகிறது.

வாலிதீர்த்தம், இராமதீர்த்தம், கபாலீதீர்த்தம், அக்கினி தீர்த்தம், வேத தீர்த்தம் முதலிய இத்தலத்தில் உள்ள புண்ணிய தீர்த்தங்களாம் இந்நூலில் பலவிடங்களில் மேற்கூறிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

இந்நூலின் மூலம் இத்திருத்தலம் மிகவும் பழமை வாய்ந்ததாகவும் இங்கு பெரிய பெரிய மகான்கள் பிறந்து வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும், திருஞானசம்பந்தர் சுந்தரர் முதலியோர் இக்கோவிலுக்குச் சென்று பதிகம்பாடி பல அதிசயங்கள் நடந்துள்ளன என்பதும் தெய்வப் புலவர் வாழ்ந்து இருக்கிறார் என்பதும் பல புண்ணிய தீர்த்தங்கள் இக்கோவில் காணப்படுகின்ற செய்தியும் அறியப்படுகிறது. எனவே இக்கோவிலுக்கு சென்று வந்தால் சிவபெருமான் அருளால் எல்லாவிதமான நன்மைகள் பெற்று வாழலாம்.

❋❋❋❋❋

## திருச்சிற்றம்பலம்

# திரு மயிலை உவமைவெண்பா

### காப்பு

பூமான் மகிழ்மயிலை புண்ணியனைப் போற்றிசெய்து
நாமா னுவமைவெண்பா நான்பாடக் - காமானுங்
கூத்த வினாயகனுங் கும்பமுலை யாரிருவத்
காத்த விநாயகனுங் காப்பு. 1

### நூல்

சுந்தரமாந் தீர்த்தத துரைச்சாரயி னாடுதலால்
விந்தைக் குளம்விரும்பு மேன்மையதா - லெந்தையருள்
வேண்டுதலா லென்றும் வியன்மயிலைத் தந்திமுகன்
பாண்டிய விநாயகனொப் பாம்பு . 2

புட்கரனி தீர்த்தம் புனைவளத்தாற் பாவைமுகம்
முட்குதிரை முகத்துண் டாக்குதலாற் - கட்செவியா
னோங்கு நகரிக் குருகீழ்க்காற் செந்தூரரான்
றாங்குமயி லாபுரிவேள் தான். 3

வள்ளுவரின் சொல்வளமே வாய்த்தசத்த மால்வரையால்
விள்ளுவகை வாயிலார்க்கு மேலதாற் - றுள்ளலைசூழ்
மாமயில்வன் புன்னையிலே வந்ததாற் செந்தூரே
யாமயிலை யென்றுதுதிப் பாம். 4

புன்னைமரஞ் சேருதலாற் பொய்யிலா மெய்விளங்குந்
தன்மையினாற் கள்ளவனஞ் சார்தலினாற் - மன்னுமதில்
வீரமாத் தாண்டனுக்கு மேற்படலா லாவுடைத்தாய்
வூர்களந்தை யூர்மயிலை யூர். 5

கருத்தன் மருவு கபாலனென் றுங்காண்பால்
நிருத்தர் பொய்யிலார் பால் நிரைவால்-திருத்துபுனைக்
கர்வுடைத்தாய் பச்சைக் கதிரிலகுஞ் சந்நிதியா
லாவுடைத்தாய் கற்பகத்தா யாம். 6

கங்கை தனுமதியுங் காணுதலாற் றாம்ரவன்னி
தங்கு மிறைவனிஞ் சார்தலினால் - அங்கை
வளைசுரமுங் கற்பகவல் லியுஞ்சேர் பண்பாலத்
தளைமயிலை யேவிதிபா தம். 7

கண்ணுவர்சூழ் வேலைக் கருத்துவைக் காட்சியதால்
எண்ணியபோ தாயினர் பணியாற் - பெண்வடிவு
தெற்குமுகச் சேவைதருஞ் சீரால் மயிலைநகர்
தெற்குதவு தென்றளிகை யே. 8

நன்கரந்தை வேங்கடத்து னண்ணியே பாலுறலால்
மன்கதிர்வே லாராசை வந்தனையா - லென்றளிகை
வாயே மருவி வரந்தரலாற் கற்பகமாந்
தாயே வடிவுடைய தாய். 9

பொதிகைமலை மேற்கீழ்ப் பொருந்துமுக வாய்ப்பாற்
பதிகுலசே கரராம் பண்பாற் - குருதி செய
குளம்வளர்த்தாள் கோங்குயல் பாடியே - கையினால்
யறம்வளத்தாள் கர்பகத்தா யாம். 10

கருவூரா பாற்றிரும்புங் கண்ணி னருளாற்
மருதப்ப ராசை வளத்தா - லிருமைக்
கடனா விரதிநதி கங்கையெனச் சேரலாற்
புடைமரு தூர்மயிலாப் பூர் 11

ஆரமலை மேல்பா லனுகலாற் கும்பமுனி
நேர முதல்வ நிரைதரலால் - நாரிசிவ
காமவல்லி மேவு கனவளத்தால் தென்பூவை
நாம மயிலை நகர். 12

வேளைபென்றும் போற்றும் வியப்பினாற் காசிமன்னன்
நாளும் பரவு நலத்தால் - சூளு
மரகதத்தாய் கற்பக வல்லியென் வாய்ப்பாற்
புரியம்மை யூர்மயிலாப் பூர். 13

முன்னீரி நாக முடியாட லக்கடனா
நன்னீப் பெரியவள் நாடுதலால் - தன்னேர்
கயிலாய ருள்ளக் களிப்பாற் பிரமை
மயிலா புரியெனவும் வாழ்த்து. 14

கும்பமுனி சந்தாற் கொற்றந் தமிழ்ப்பெறலாற்
செம்புனல் வாரி சிரந்ததனா - லம்புவியிற்
பொன்மலையின் சிர்வசந்தன் பூவார்ந்த தால்மயிலை
நன்மலைய மென்றுதின நாடு. 15

உலகின்பாற் கல்யாண முற்றுதவு பண்பால்
இலகுமலை லயாசலஞ் சேரின்பாற் - பலர்புகழும்
செட்டிக் கருள்செயலாற் சீர்ப்பாவ நாசகங்கை
இட்டமயி லாபுரியே யாமே. 16

அத்திதீர்த் தங்கண் ணழுகுறலாற் கல்யாண
சத்தியெந்த நாளுந் தழைத்திடலால் - முத்திக்
கடனை வழங்குங் கனத்தால் மயிலை
குடமாஞ் சிவசலில் மே. 17

கும்ப நியதிதிரி கூடச் சிவமெனலாற்
சம்பந்தன் பாப்புனையுந் தண்பலவாற் -கொம்புழல்
வாய்மொழித்தா யுங்கள் மருவுதலால் குற்றால
நாம மயிலை நகர். 18

களவி லடியவரைக் காண்பார்க்கும் பண்பால்
வளர்கபா லீசரென்னும் வாழ்த்தால் - அளவளவா
மொப்பவனையும் பக்க முறலாற் கருவைநல்லூர்
இப்புவியிற் றென்மயிலை யே. 19

நாக மகிமையினால் நற்கூழைச் சொற்பெறலால்
ஏக வடிவிலரி யின்புறலாற் - பாகமெல்லாங்
கோமதி குலாவுதலாற் கோமசீ ராசைநகர்
பூமயில்வாழ் தென்மயிலாப் பூர். 20

பூமி வணங்குதன்மை பூணுதலால் மீறுகின்ற
நேமிசுழித் துள்வாங்கு நேர்மையினால் - நாமின்
வழிபாடு செய்ததுனை மாலை புரிவரலாற்
சுழியால் மயிலையெனச் சொல். 21

காளை வடிவார் களிப்புறலாற் சிங்கார
வேளை வணங்கியருள் வேண்டுதலால் - நீளுலகின்
மானதியாங் கங்கை வாய்த்தவர்கொண் டாடுதாலாற்
கானப்பே ரேமயிலை காண். 22

காணவரு மப்பனெதீர் காட்சி கொடுப்பதனாற்
பூணுவன்னி போலுமுருப் பூத்ததனாற் - பேணுமிசைப்
பாவணந் தாணுமவை (வேற்)பால னொரு பாலுறலாற்
பூவணமே தென்மயிலாப் பூர். 23

கானப்பே ராறுசிவ கங்கைகுளங் காணுதலால்
ஈனத்தா ரும்பெருமை யெய்துதலாற் - கானல்புனை
நத்தார் வகைப்புனல்நீர் நாடிக்கோ தைக்கிசைவாற்
புத்தா ரேயாமயிலாப் பூர். 24

ஆப்பு ரையினாம மைதலாற் பஞ்சவளங்
காப்புகளின் மேன்மைபெருங் காட்சியினால் - மீப்புவனங்
கூர்ப்பார் வணங்குங் குணத்தினாற் றென்மயிலை
யாப்பனூ ரென்றே யறி. 25

கடம்பவன்ன பெண்பெறலாற் கற்பக விமான
மிடம்பழகுங் காட்சி யிசைவாற் - றிடங்கொள்
கபாலீச னென்றுங் களிவால் மயிலைக்
கபாலீச்சுர மதுரை காண். 26

பரவர் குடியிருப்புப் பாலியென்ற வாய்ப்பால்
அரசர் திறைகொள்ளுங் கவன்பாற் - கரிமுகனைக்
கோனாட்சி யாடற் குலவுவிசித்தி யாக்கினதால்
மீனாட்சி கற்பகமா மே. 27

ஆடல் யானைக்கு மணிபூட்ட லாலிறைவன்
கூடலுக்கு மென்முகவாய்க் கொண்டதனால் - நீடுசெவ்வே
ளொன்று முதற்றலமென் றுற்றதா லோங்குபரங்
குன்று மயிலையென்றே கூறு. 28

நீர்க்கரையிற் சேரு நிலமையாற் காளியர்கோன்
கூர்க்குலிச நிறுத்துங் கொள்கையால் - ஊர்க்குளுயர்
மாட மதுரை வனத்துக் கிசைந்ததனா
ஏடகநே ராமயிலை யே. 29

வைகைக்கும் பொன்னி வளநாட்டுக் குஞ்சிறந்த
மெய்வைத்த கீர்த்தி விளங்குதலாற் - கைவைத்த
வேலன் மருவும் விருப்பாற் பழமுதிர்
சோலை மயிலையெனச் சொல். 30

நேரியரு மீனவரு நின்றுதின பொருதலாற்
சீரியரே காணுஞ் சிறப்பினால் - சார்தலினா
லன்றே தினங்காணி யண்ணல் புகழார்ந்தகொடுங்
குன்றே மயிலையெனக் கூறு. 31

கோங்குமணம் வீசுதலாற் கூர்பழனி வாயமதாற்
பங்கயனாற் றேவர் பரவுதலால் - மங்கைவள்ளி
மேவுங் குகனும் விரும்புதலாற் றென்மயிலை
யாவினன் குடிக்குநிக ராம். 32

ஊரர்முனம் விண்ணாக முற்றிடலா லங்கிசைந்த
சேரலர்க்கும் பாய்ம சிந்திடலா - லோரிறைவன்
செஞ்சொற் கவிதைகொள்ளுஞ் சீராற் றிருமயிலை
யஞ்சக் களத்தைநிக ராம். 33

வன்மீன் மதலை வழங்குதலால் வந்தவர்க்கு
நன்மா மணம்பொருந்த நல்குதலாற் - றென்னாருர்
வேந்தர் மகிழ்ந்திடலான் மின்குடபாற் சேருதலால்
ஆய்ந்தவவி நாசிமயி லை. 34

ஆனிலையிற் காட்சி யருளுதலாற் கைமழுவா
வீனமுற்றே றுய்ய விரங்குதலாற் - றேனார்
புனைவளவ னாரின் புகழ்பெறலா னெஞ்சே
நினைமயிலை யூர்கருவூர் நேர். 35

பேதைப் பிணியகற்றும் பெற்றியினா லெப்பொழுது
மோதக் கடல்முரச மொத்துளதால் - நீதகிள்ளைப்
பேச்சினால் வேதப் பிறப்பாற் றிருப்பாச்சி
லாச்சிராம மயிலை யாம். 36

கஞ்சநங் கைமேவுங் கனதனத்தார் வாழ்க்கையினால்
வஞ்சியுரை மேல்கீழ் வாய்த்தலால் - மிஞ்சு
குடமபாய்ந்த காவேரி கூடும் வியப்பாற்
கடம்பூர் மயிலைநகர் காண். 37

ஆராரொன் றாவர்செவ் வந்தி விருப்புறலாற்
பேராவான் கற்பகத்தாய்ப் பெண்ணிசைவாற் - கூருங்
குயில்வார் குழலைக் கூடு நயத்தால்
மயிலைசிராப் பள்ளி மலை. 38

காவேரி சூழாங்கங் கைநாக நாடுதலால்
பாவேர் சிலம்பி பணிவதனாற் - பூவேயும்
செங்கண்ணும் போற்றுஞ் சிறப்புளதாற் றென்மயிலை
யங்கணன்வா ழானைக்கா வாம். 39

மாலயனன் னாப்பதிகம் வாய்த்ததாற் சிந்தனையில்
நாலையுங்கண் டோர்க்குதவி நன்னுதலாற் - கோலமுறும்
உண்ணா முலையா ளுவந்தான் புகழ்மிகலால்
அண்ணா மலைமயிலை யாம். 40

தூய மலைக்குமுன்பு தோன்றுதலாற் கற்பகமுஞ்
சேயவன் னிதம்படிவஞ் சேருதலாற் - றாய்பெரிய
நாயகியு முத்த நதியுமேற் கொள்வதனால்
ஆயவிருத்த வெற்புமயி லை. 41

பல்லக்கு முத்தருட் சம்பந்தர்க் களித்ததனாற்
வல்லகொடை யுங்கொடுக்கு மாண்பதனால் - மல்கும்
வரத்துறைநெல் வாயிலார் வண்மை பெறலால்
அரத்துறையுந் தென்மயிலை யாம். 42

வன்றொண்டர் பாட வரும்பெண் மணம்விலக்கி
யன்றாண்டான் நல்கு மருமையால் - ஒன்றினைமெய்
கண்டவர்க்குங் காட்டுங் கருணையினால் வெண்ணைநகர்
அண்டர்புகழ் தென்மயிலை யாம். 43

நாவின்மன் வர்க்கருளை நல்குதலா லாரூரர்
சேவடிகா ணபதிவு சேர்ப்பதனாற் - பாவின்
திருக்கெடில வாழ்வுபுனை சீரா லதிகை
யிருக்குமறை சூழ்மயிலை யே. 44

நாலுமறை பொருளு நன்மயிலே நல்குவதாற்
தாலமதிற் பெண்கொடுக்குந் தன்மையினாற்- பாலனென்றுஞ்
சம்பந்தன் மேன்மை தழைதிடலாற் றென்மயிலை
நம்பர்திரு வோத்தூராய் நாடு. 45

தோனக வணங்குதலாற் றொண்டைமான் கண்டதனாற்
வாகைவேள்சிங் காரமா விருப்பதால் - நாகம்
வளர்மாத மாலிசைந்த வண்மையாற் காஞ்சி
கிலார்மயிலை யென்றே கிளத்து. 46

கம்பைத் திருநகரிற் காணுலாற் கைவளையும்
விம்பத் தணைக்கும் வியப்பினால் - நம்பன்வல்
மாமாட்சி சேர்ந்து வரிசைக் கொலுப்பெறலாற்
காமாட்சி கற்பகத்தாய் காண். 47

பாவலவர் தாமிசையப் பாக முவந்தனாற்
பூவுலகிற் கற்பகத்தின் பொற்புளதாற் - பூவுலகு
மெச்சியபூம் பாவை விளங்கியதாற் றென்மயிலை
கச்சூ ரெனவுங் கருது. 48

மெய்ப்பொருள் வேடன்கருத்து மேற்கொளலா லவைபின்பாற்
கைப்பொருள்கள் நம்பினார்க்குக் கானுதலால் - எய்ப்புறவே
யந்தகனைத் தாக்கு மயிலான் மயிலைநகர்
கந்தமலி கோவலூர் காண். 49

தொண்டைநாட் டார்காணுஞ் சூழ்ச்சியினாற் கைவேழம்
விண்டு நடித்தமுத்த மேன்மையாற் - றண்டலைகள்
பாயுங் குயில்கள் பயிலுவதாற் றென்முல்லை
வாயில் மயிலையென்வேற வாழ்த்து. 50

முடங்கல் வளரு முதுமையினாற் காணு
மிடங் கொண் டிறைவ னிருப்பதால் அடர்ந்தவயி
னேசா கரத்தார் நிறைதலினாற் றென்மயிலை
பாசூ ரெனவே பணி. 51

வேளாள வன்மை விளங்குதலால் ரத்னசபை
சூளாத ரவினற்பாற் றோன்றுதலால் - நீள்தடத்தின்
வண்டார் குழற்பெண் மருவுதலா லங்கா
டண்டனுறை தென்மயிலை யாம். 52

கல்லினிசை கோயிற் காணுதலாற் கற்பகப்பூ
வல்லியுங் காவி மருவுதலால் - வல்லிபுணர்
வேடன் கதிர்வேல் விளங்குதலாற் றென்மயிலை
யாடற் றிருத்தணிகை யாம். 53

சங்காழி மான்மருவுந் தன்மையா யென்னாளு
மங்காத நாக வடிவிசைவாற் - கொங்காரும்
பூங்கடம்பன் கோயிலென்றும் போற்றுவதாற் றென்மயிலை
வேங்கடமு மாம்புவியின் மேல். 54

வேடன் பரிவுறலால் வேழமுங்கொண் டாடுதலா
லாடகநீர் நாக மணுத்ததலா னீடுகற்ப
ஞானப்பூங் கோதை நலந்தரலாற் றென்மயிலை
யானக்கா ளத்தி யாம். 55

நந்திவரைச் சார்பா னதிதக் கணமுளதால்
உந்துமனந் திகிரி யொற்றுமையால் - விந்தை
யயிலெடுத்தான் சிங்கா ரனாகவரு பண்பாலக்
கயிலை மயிலைநகர் காண். 56

கற்பகத் தேனாரிமையக் கண்ணுறலாற் காசியினு
முற்பனமாங் காட்சி யுதவுதலாற் - றற்பரஞ்சார்
பிருங்கிருடி யானவரைப் பேணுதலாற் கேதாரம்
பொங்கு மயிலையென்றே போற்று. 57

ஈனப் புலைச்சிக்கு மின்புதவ லாலிலங்கை
மானத் திசையாத வின்புதலாற் - றானநிறை
கன்னன் விளையாட்டுக் காட்டுதலா லீண்டொருகோ
கன்ன மயிலையென்றே காண். 58

என்புங் கதிபெறலா லேழுலமே யப்பதனால்
தென்பனுவல் வேள்கதையைச் செப்புதலா - லன்பின்பிணி
கன்னிகைபுன் னாகமுயர் கங்கையுற லாற்காசி
மன்னு மயிலையென்றே வாழ்த்து. 59

கமலை யிருப்பிடமுங் காட்டிவிக்கும் பண்பால்
அமலை வடிவா மதனாலி - மையோர்
வலமாய் வணங்கும் வளைத்தாள் மயிலை
தலமாந் திருப்பருப் பதம். 60

இலஞ்சி வியப்பா லெழின்ம றையோன் சொற்குப்
பலன்புதிய பெண்கொடுக்கும் பண்பால் - தலஞ்சிறந்த
தென்றுபட்ட ணத்தா ரிசைவால் வடிவுறலா
லொன்றுமொற்றி யூர்மயிலை யூர். 61

முற்றில் வனங்குசனை மூவராப் பதாலொருசார்
புற்றுமுனி யன்பரென்றும் போற்றுவதாற் - கற்பகஞ்சேர்
கேசகரியும் பாக மிசைவாதாற் றென்மயிலை
யாசில்திரு வான்மீயூ ராம். 62

செட்டிமக ளன்பாற் றிரிபுண்ட ரர்பணியாற்
கட்டழகி பெண்ணினல்லாள் கற்பகத்தாற் - கிட்டு
முழுக்குன்று வேத முறைமையா லெங்கோமான்
கழுக்குன்று தென்மயிலை காண். 63

பெண்ணை வளர்ப்பதனாற் பேராறு தோன்றுதலாற்
கண்ணுதலார் நாளுங்களிப்ப றலால் - நண்ணினர்க்குப்
பாத்தூர்செம் பொன்னுதவு பாண்பால் மயிலையு
மாமாத்தூ ரெனவே மதி. 64

பதிசோறுங் கேதகையிற் பூப்பதாற் பந்த
ரதின்மாடங் காட்டு மறைவாற் - பதிகா
வருகால் வழித்துணையின் வாய்ப்பான் மயிலைக்
குருகாவூ ரென்றுதினங் கூறு. 65

பெண்ணைமுத்தங் கூடும் பெருமையினா லாரூரர்
நண்ணியதி செயத்தை நாடுதலா - லெண்ணுமன்பி
............... ............. ............ ............
............... .......... ..... 66

சொல்லரசர் கற்படு தோன்றுதலாற் பாடலத்தின்
வல்ல பெயரு மருவுதலா - னல்லிசையின்
றெனனை வளத்தாற் றிருப்பா திருப்புலியூர்
புன்னை வளர்மயிலாப் பூர். 67

சிவகாமி யார்வாழுஞ் சீரின் சிறப்பாற்
பலகாம மாற்றும் பரிவால் - உவரிமிகு
மெல்லையினை நாகவன மென்பதாற் றென்மயிலை
தில்லைவன மென்றுதினஞ் சேர். 68

நாகம் புலிபயிலு நல்வேலை கொள்வதனாற்
பாக மொருகற் பகமுளதா - லேகனுயர்
கபால நாடகம்பெண் காணுதலாற் றென்புலியூர்
கபாலன் வாழ்மயிலை காண். 69

பஞ்சாக் கரமதனாற் பாதை பகுப்பதனால்
மஞ்சார் சதத்தீர்ககால் மண்டபத்தாற் - றுஞ்சில்பே
ரம்பலமுங் காணு மணியா லரன்றிருச்சிற்
றம்பலமுஞ் தென்மயிலை யாம். 70

கங்கரையால் மேல்முகத்திற் காதல் விருப்புதலாற்
றங்குபர மானந்த சார்பதனா - லைங்கரனுங்
கற்பகமென் றாடல் கணித்திடலாற் கற்பகத்தாய்
நற்சிவகா மிப்பெண்ணென்றே நாடு. 71

தோணியென்றுங் கண்டதனாற் றுங்கவேள் தோன்றுதலாற்
பூணுநிலை யழகு பூத்ததாற் - சேண்வினைதீர்
காரி மகிழ்ந்து கலிந்திர்ப்ப தாற்காழி
யூரே மயிலையென்னு மூர். 72

புள்ளிமயில்வி ளங்கும் பொறற்பினால் பூங்கதிர்வேல்
வள்ளலதி காரம் வாய்ப்பதனாற் - கள்ளவினை
தீர்த்தொருபா லத்தையல் மகிழ்சேவை மேற்காய்த் தலா
லாத்தனவேறார் மயிலை யாம். 73

வாட்கப் பெண்ணென்றும் வரந்தரலால் முத்தயகு
நாகடுத்த பேரொளிகூர் நல்லிடத்தால் - யோகமிகுஞ்
சேயவாரங் கொள்ளுஞ் சிறப்பால்வே ளூர்தையால்
நாயகியே கற்பகமா னாள். 74

கேகயம் பூசித்துக் கிருபைபெற லாலிறைவன்
பாகமதி லஞ்சால் பழகுதலால் - நாகதரு
நீடுகாவேரி நீதிதாலா லிங்கும்யி
லாடுதுறை தென்மயிலை யாம். 75

செங்கோ லிறைவர் தினமும் பரவுதலாற்
பொங்கோதை நாளும் பொலிவதனாற் - றங்கு
மருமைப் பதிகவிசை யாழொலிக்கும் பண்பாற்
றரும்புர மயிலைநகர் தான். 76

பொன்னினீர்ச் சங்கம் பொருந்திச் சுவேதவன்
மின்னு மகிமை யிசைவதால் - முன்னைமக
னாடவே முக்குளமு நல்குவதால் நன்றறிவன்
காடன்மயி லேசனென்று காண். 77

அந்தகமா மால்வினைதீர்த் தைங்கரத்தோ னாடுதலாற்
சிந்துரநே ராலச் சிறப்புளதால் - மந்திரத்தின்
சாலை விளங்குந் தகுதியினாற் றென்மயிலை
யாலவன மென்றே யறி. 78

சமயநிலை நிறுத்துந் தற்பரனாற் வாய்ப்பா
லமைவுறு மேற்கொளி னணியா - லுமையவள்பாற்
போகமார்த் தோங்குமுலை பூம்பாவை யுள்ளதலால்
நாகமயி லைநள்ளா று. 79

சொற்புலவ ருட்புகலாற் சூழ்ந்துகருந் தார்க்குழவி
கற்பகப் பெரன்னூர்க் கருளுவதா - லற்பால்
முருகனார் செய் தொழிலின் மோகமுறலாற்
றருமயிலை தென்புகலூர் தான். 80

இலையந்த னைகணப தீச்சுரமென் றார்பாலத்
தலைவர்கபா லீசுரென்றுஞ் சார்பார் - கோலையில்
மடிமதலைக் காட்டும் வரத்தால் செங்காட்டங்
குடிமயிலை யென்றுதினங் கூறு. 81

மன்னுரை நல்க வணி கன்மகள் கைதொழலால்
துன்னும்வன் வாணுதற்குத் தோன்றுதலால் - மின்னுவண்டு
வார்குழற் பெண்பாக மருவுதலால் தென்மருத
லூர்நிக ராமயிலாப் பூர். 82

சுருதி வழிபடலாற் சொல்லினால் வாரி
விரியக்கோள் செய்விப்பப் பாலக் - காவில்புக
ழாகுயரச் செய்தாட லரனைவிருப் பால்மயிலை
பாகமறைக் காட்டுப் பதி. 83

ஓடமிகு வள்ளமதி லோட்டிவிக்கு மெய்ப்பதனால்
நீடுபுத்தர் கீழாக நின்றிடலால் - நாடிவரு
பிள்ளையைக் காண்பார்க்கு பெருமையினாற் றென்மயிலை
கொள்ளம்பூ தூரெனவுங் கூறு. 84

பரவையிடந் தூதிசைந்த பாங்கருறு பண்பால்
லரவிந்தப் பூம்பாவை யன்பால் - வரிசையுடன்
கற்பகத்தாய் விடங்கண் கண்ணுதலாற் றென்மயிலை
யுற்பனஞ்சே ருந்திருவா ரூர். 85

கலையருக்குஞ் செல்வம் கலந்தளிக்கும் பண்பால்
கொலைமறலைப் போக்குங் குணத்தால் - லலையிற்
குடவலை கோரிகாரி கூடுதலா னாளுங்
கடவூர் மயிலையென்றே காண். 86

பூசுரர்க்கா யான்மாவைப் பூரித் துதவுதலால்
மாசிலா தோங்கு மணிநிறைவால் - பேசிலொப்பி
லாமுலையு மர்ச்சனைசெய் தன்பா தனையுயர்பாற்
காமயிலை தென்றுறைசை காண். 87

மந்திரஞ்சொல் வாலசன் வணங்கு மிடத் தால் வருஞ்சம்
பந்தர்க்கும் பொன்கொடுக்கும் பான்மையா - கலைந்தருவு
மாமணியுஞ் சேர்துறைசை மன்னியோன் யாள்மாசி
லாமணிக பாலீ சனாம். 88

பூசத்தா னங்களபம் பூத்தபொன்னி வாய்த்ததனால்
நேசத்தார் வாய்மை நிகழுவதால் - மாசில்
வரகுணரைக் காக்கும் வளத்தால் மயிலை
யரனா நிடைமருதூ ராம். 89

நாவலர்க்குக் காசுபடி நல்குதலற் றோணிவள
மேவியளுள் ஞானத்கண்டு வேண்டுதலால் - மாவலவர்
போற்று மயிலை புனைதலாற் றென்மயிலை
யாற்றலுறு வீழிமிழ லை. 90

மாகநீர் வாரி வழங்குதலாற் கைக்கொண்ட
மோகவிசு வேசுரனு முற்றிடலால் - மேகமொப்பா
யாரா வமுதநிறை நாதற்கு முதவுதலாற்
கூறா மயிலைகும்ப கோணம். 91

தேவிசெய்யும் பூசை சிறப்பாகக் கொள்ளுதலால்
ஆவியில்லார்க் காவி யளிப்பதால் - மேவரிய
பத்திமுற்று நேசர் பணியாற் பொருள்பெறலாற்
சத்திமுற்றந் தென்மயிலை தான். 92

அமர்நீதி நேசர்பணி யன்றிளக்குஞ் ராற்
றமைநேருங் கோவணமுஞ் சார்பாற் - சுமைதலையா
யெல்லாரும் போற விடநாக மேற்கொளலால்
நல்லூர் மயிலை நகர். 93

வேணு புரத்தவர்க்கு வேணி லகற்றுவதாற்
றாணுபசும் பூசைகொளுந் தன்மையால் - பேனுகின்ற
பன்மயிலைக் காவிரியும் பைம்புனலுங் காணுதலாற்
றென்மயிலைப் பட்டீச் சுரம். 94

பொன்னியங்கள் மேவுதலாற் புன்னைவளம் பாடுதலாற்
சென்னியுங்கைக் கொண்டீசன் சேருதலால் - வன்னம்
பயிலைமலைச் சாமியொரு பாலனென்றும் வாய்ப்பான்
மயிலை வலஞ்சுழியு மாம். 95

காவிரிக்கும் வியபாரற் கந்தசா மிக்கிசைவாற்
பூவிரிக்கு நாகம் பொருந்துலால் - மேவுமறை
நால்வருந்தன் மாசகல நண்ணுதலாற் றென்மயிலை
வேலிறைவ னேகரமா மே. 96

ஆலத்தால் மாண்டவரை யன்றழைக்குங் கீர்த்தியினாற்
றாலத்தார்க் திங்களூர் சார்தலினா - லேலக்
குழகன் வழிபடுவோர்க் குள்ளிருக்கும் வேளூர்
பழன மயிலைப் பதி. 97

தங்கொருத்திக் கின்னாகந் தான்வளைவால் நேரயர்ந்து
குங்கிலியத் தாருமகிழ் கூர்தலினா - லங்குந்
தினந்தாள் வணங்கினாக்குச் சீர்மை தரலாற்
பனந்தாள் மயிலைப் பதி. 98

வேலவரென் னாளும் விரும்பும் பதியதனாற்
பாலளித்து பாலனைக்காப் பாற்றுதலாற் - கோலமிகு
சென்னைநக ருக்கடுத்த தென்பால் வளருதலா
லுள்ளுமயி லூர்சேய் ஞலூர். 99

அப்பனுக்கு வங்கமலை யார்காட்சி காட்டுதலால்
விப்பிரன் சொற்கேட்கும் வியப்பினால் - மெய்ப்பா
மறையோது மாமுனிவர் வாழுந் திருமறைக்காட்
டிறைவன் மயிலையா னே. 100

வாகீசர் நற்பணிகொள் வாய்ப்பதனாற் பூவைகிளை
பாகீசை வாகமங்கள் பாடுதலா - லாகூரன்
கூர்ந்தவடி விசைந்து கொண்டால் மயிலை
பூந்துருத்தி யென்றே புகல். 101

குந்தமலி யாசானக் கும்பிட் டிறைஞ்சுதலாற்
சந்தமா ணிக்கந் தழைப்பதனா - லைந்தடக்கும்
வாயிலார்க் கின்பம் வழங்குதலா லாவுடையார்
கோயில் மயிலையென்றே கூறு. 102

நல்லபூம் பாவைதொழும் நற்பெரிய நாயகியாம்
வல்லியரு ளெவர்க்கும் வாய்ப்பதனாற் - றெல்லை
மானவாக்குக் கெட்டான் மருவுடற் சார்பாற்
புனவாயிற் றென்மயிலாப் பூர். 103

அன்பா யிலேச வளவும் பிரியாத
தன்பாத சேவை தருதலால் - இன்பாக
நேடானைக் கொண்டாடி நேசித்து நிற்பதனால்
ஆடானை யான்மயிலை யான். 104

பருதிகுல ராமன் பணிந்துசெலும் பண்பா
லொருசிவ னாகங்கொ ளூர்த்தா - லிருவினையுந்
தீர்த்துமட வார்பவமுந் தீர்ப்பதாற் சேதுநகர்
கூர்த்தமயி லாபுரிக்கொப் பாம். 105

மானிலத்து முந்து மகிமைப் பதியெனலாற்
றானடங் கற்றேருஞ் சார்வதனாற் - பான்மைமிகு
மங்கலநீர் வாய்ப்பால் வளருத் தரகோச
மங்கைமயி லாபுரிநேர் வாம். 106

சிந்து மதிலுஞ் செறிய நடந்ததனால்
விந்தையா னந்தவல்லி மேவினதால் - எந்தையிடங்
கங்கைசித் திரமாகக் கலந்ததனாற் றென்மயிலை
கங்கைகொண் டானென்றே கருது. 107

சிந்து கரையிற் செறிதலாற் சிற்பரமா
மந்தரங்க னாடு மறையினால் - விந்தை
பயில்வாகுந் தன்பொருத்தம் பாலுற் றிசைவால்
மயிலைநகர் செப்பறையு மாம். 108

தெக்கணத்திற் காசி செயல்நடத்து மென்பதனாற்
பத்துகணமே யெங்கும் பகுத்திடலா - லக்கணியும்
வேந்தர் கயிலாயர் மேவுதலா லெங்கசிந்து
பூந்துறையாந் தென்மயிலாப் பூர். 109

சந்தி விநாயகனுந் தானாடுந் தன்மையினாற்
புந்தி யினசந்து பூந்துறையா - லெந்தையுரு
முல்லையன கண்காணு முறைமையாற் றென்மயிலை
நெல்லைநகர ரென்றே நினை. 110

வேண்ட வளர்ந்ததனால் மேலும்வன்னி பூண்பதனாற்
காண்டகுமோர் பெண்வடிவு காணுதலா - நீண்டுயர்ந்த
வேனில் விருப்பான் வியப்பான் மயிலீசர்
சாலிவா டீசரென்றே சாற்று. 111

அத்தியினிற் பூவை யழைத்திடலா லவ்வேழம்
பத்தாவி னாடப் பரிவறலான் - முத்திதரு
கம்பைநதிக் கீழ்பாற் காணுதலால் கற்பத்தா
யம்பிகையே காந்திமதி யாம். 112

செந்தமிழி னெல்லை சிறப்பதனாற் றிண்டிரைகள்
சந்ததமு மோசை தழைத்திடலால் - விந்தைபெறு
கன்னியம் பூம்பாவை கதிதரலாற் றென்குமரி
பன்னுமயி லாபுரிகொப் பாம். 113

மூவர் தமிழ்க்கொள்லால் முன்னுற்று மன்பதைப்பூம்
பாவை யியற்றும் பணியினாற் - காவலவர்
போற்றி யரசுரிமை பூண்பதா லென்சிந்தை
யாற்ற மயிலைநக ராம். 114

தேசிகமாப் பிள்ளை சிறந்தருளி னாடுதலால்
ஈசர்நா கலையுஞ் சேர்ந் தின்புறலாற் - பேசுமிசைச்
சொல்லி னழகுஞ் சுகந்தரலாற் றென்மயிலை
வல்லவடி வீசுர மாம். 115

வள்ளி மணமலையும் வாய்ப்பாற் றிருமலையி
னுள்ளுங் கதிர்காம முற்றிடலால் - வள்ளலுயர்
மன்றுசுப் பிரமணிய மருவலாற் றென்மயிலை
குன்றுதோ றாடலென்றே கூறு. 116

வாரணமுங் கான மடமயிலுஞ் சேர்வதனாற்
காரணவேள் சிங்காரங் காட்டுதலாற் - கூர்மயிலைக்
கற்பக விருப்பினாத காந்தனருள் மீறுதலா
லுற்பனஞ்சேர் வள்ளிமயி லூர். 117

சூட்டுமலைச் சார்பாய்த் துலங்குதலாற் றோகைவழி
பாட்டி லுயரும் பசியினா - லீட்டும்
புயல்சூழ் தளவாய் புத்திரன் சிறப்பால்
மயிலைமா யூரமென்று மாம். 118

சிந்து வாய்க்கும் சிறப்பாற் சிவகாம
சுந்தரியாங் கற்பகமுந் தோன்றுதலால் - வந்தித்
தணிவிசையு மேய்ப்பா லருட்பலவா லெந்தை
யணிவீச்சு ரமும்மயிலை யாம். 119

சொன்னா கமம்விளங்குந் தோற்றத்தால் மாயவனா(ர்)
நி(ரி)ன்னா கமங்கொண்டிறை சூடுதலால் - மன்னும்
வயிரவ கபாலரென்றும் வாழ்த்து மியல்பால்
மயிலைம யேந்திர மலை. 120

சன்னதி யாஞ்சிந்து தழைத்திடலாற் புன்னாகந்
துன்னு மதிற்குமேற் றோன்றுதலா - லென்னிறைவன்
பக்கமதில் நம்பி பறிவுறலாற் றென்மயிலை
மிக்ககுருங் காபுரியா மே. 121

பெண்ணாகஞ் சேர்ந்ததனாற் புடபாற் கடலிசைவா
லென்னாளுங் கற்பகஞ் சேர்ந்தின் - மின்னாகம்
நீண்டாங் குறுங்குடியால் நித்தமயி லேசரென்னை
யாண்டா தரிக்கும்நம்பியு மாம். 122

நாலுதிசை முகமு நண்ணுதலாற் பாரதியுங்
கோலமுறு பங்கங் குலவுதலால் - ஆலுமறை
யன்னங் கமல மடாவாவி சூழுதலால்
மன்னுமயி லூர்பிரமா வாம். 123

நாகமணி யென்றுலகோர் நாடவெயில் நல்குதலா
லேகனுக்குக் கண்ணென் றியம்புதலாற் - பகாமதிற்
பன்னிரண்டு செங்கரத்துப் பண்ணவனாங் காதலினா
லுன்னிரவி காண்மயிலாப் பூர். 124

எட்டெட்டு வான்கலையா லிந்திரைக்கு மொய்த்துணையால்
வட்டநில வாகு மகிமையினா - லிட்டமுடன்
கற்பகஞ்சேர் நாகதலங் கண்ணுறலாற் கிந்திரனும்
பொற்புமிக தென்மயிலாப் பூர். 125

மருத நிலத்தார் மருவுசுக வாய்பாற்
றருவிலுயர் கற்பகமுஞ் சார்பால் - லொருவெண்ணால்
தேவர் கபாலரென்றுஞ் சேர்தலினால் விண்ணுலகம்
பூவுலகின் மேல்மயிலாப் பூர். 126

எட்டுநா கஞ்சூழ்ந் திடுதலாற் கற்பகமுங்
கிட்டலில்லா வெங்கோன்கைக் கேயிசைவால் - வட்டப்
புவனங்க ளுக்குயர்ந்த பொற்பால் மாமேரு
நவமயிலை யென்றுதின நாடு. 127

சலக்கடலும் பாலிற் றழுவுதலால் நாகத்
திலக்குமிக்கு நாத னிசைவாற் - பலத்தாற்
றன்மயிலார் பாலில் சிறந்தவெண்மை சேர்பாற்
கன்மயிலை யேபாற் கடல். 128

ஆவி னிறைவா லயனும் விரும்புதலால்
மாவின் முகநாடி மருதவுதலாற் - காவி
பயில்விழிப் பூம்பாவை பறிவுறலா லென்று
மயிலையிரு தாமரைப்பூ வாம். 129

## பயன்

மயிலையுவ மைவெண்பா வாசிப்போர் கேட்போர்
பயிலுமிகச் சிந்தை பதிப்போர் - கயிலைமுத
லெல்லாத் தலமு மிறைஞ்சுதவப் பேறெய்தும்
வல்லார் சுகம்பெறு வார். 130

# முதற்குறிப்பு அகராதி


**அ**

அத்திதீர்த 17
அத்தியினித் 112
அந்தகமா 78
அப்பனுக்கு 100
அமர்ந்த 93
அன்பா 104

**ஆ**

ஆடல்யானை 28
ஆப்புரை 25
ஆரமலை 12
ஆராரொன் 38
ஆலத்தால் 97
ஆவினிறை 129
ஆனிலையிற் 35

**இ**

இலஞ்சி 61
இலையந்த 81

**ஈ**

ஈனைப்புலைச் 58

**உ**

உலகின் 16

**ஊ**

ஊரர்முனம் 33

**எ**

எட்டுநாகஞ் 127
எட்டெட்டு 125
என்புங் 59

**ஓ**

ஓடமிகு 84

**க**

கங்கரை 71
கங்கைத் 7
கங்சறுங் 37
கடம்ப 26
கண்ணுவர் 8
கமலையிருப் 60
கம்பைத் 47
கருத்தன் 6

| | |
|---|---|
| கருவூரார் | 11 |
| கலையருக் | 86 |
| கல்லிசை | 53 |
| களவிலடி | 19 |
| கற்பகத்தே | 57 |
| காணவரு | 23 |
| காவிரிக்கும் | 96 |
| காவேரி | 39 |
| காளைவடி | 22 |
| கானப்பே | 24 |
| குந்தமலி | 102 |
| கும்ப நியதி | 18 |
| கும்ப முனி | 15 |
| கேகயம் | 75 |
| கோங்கு | 32 |
| **ச** | |
| சங்காழி | 54 |
| சந்திவிரா | 110 |
| சமயநிலை | 79 |
| சலக்கடலும் | 128 |
| சன்னதி | 121 |
| சிந்துகரை | 108 |
| சிந்துமதி | 107 |
| சிந்துவாய் | 119 |
| சிவகாமி | 68 |
| சுந்தரமாந் | 2 |
| சுருதிவழி | 83 |
| சூட்டுமலைச் | 118 |
| செங்கோ | 76 |
| செட்டிமக | 63 |
| செந்தமிழ் | 113 |
| சொல்லரசர் | 67 |
| சொற்புலவ | 80 |
| சொன்னா | 120 |
| **த** | |
| தங்கொருத்திக் | 98 |
| தூயமலை | 43 |
| தெக்கணத்திற் | 109 |
| தேசிகமாப் | 115 |
| தேவிசெய்யும் | 92 |
| தொண்டைநாட் | 50 |
| தோகை | 46 |
| தோணியென்றுங் | 72 |

**ந**

நந்திவரைச் 56
நல்லபூமி 103
நன்கரந்தை 9
நாக மகிமை 20
நாகமணி 124
நாகம்புலி 69
நாலுதிசை 123
நாலுமறை 45
நாவலர்க்கு 90
நாவின்மன் 44
நீர்க்கரை 29
நேரியரு 31

**ப**

பஞ்சாக்கர 70
பதிசோறுங் 65
பரவர்குடி 27
பரவையிடந் 85
பரிதிகுல 105
பல்லக்கு 42
பாவலவர் 48
புட்கரணி 3
புற்றுமயில் 73
புன்னைமரஞ் 5
பூசத்தா 89
பூசுரர்க்கா 87
பூமான் 1
பூமிவணங்கு 21
பெண்ணாகஞ் 122
பெண்ணைமுத் 66
பெண்ணைவளர்ப் 64
பேதைப் பிணி 36
பொதிகைமலை 10
பொன்னியங்கள் 95
பொன்னீச் 77

**ம**

மந்திரஞ் 88
மயிலை 130
மருதநிலத் 126
மன்னுயிரை 82
மாகநீர் 91
மாலயனன் 40

மானிலத்து 106
முடங்கல் 51
முற்றில் 62
முன்னீரி 14
மூவர்தமிழ் 114
மெய்ப்பொருள் 49

வ

வள்ளிமண 116
வள்ளுவரின் 4
வள்மீன் 34
வன்றொண்டர் 43
வாசீகர் 101
வாட்கப் 74
வாரணமுங் 117
வேடன்பறி 55
வேனுபுரத் 94
வேண்டவளர்ந்த 111
வேலவரென் 99
வேளாள 52
வேளையென் 13
வைகைக்கும் 30

# சொல்லடைவு


## அ

அண்ணல் 31
அண்ணாமலை 40
அணிவீச்சு 119
அஞ்சு 76
அங்கணன் 39
அத்தி 112
அதிகாரம் 73
அண்ணாமலை 40
அப்பனுக்கு 100
அம்பலம் 70
அம்பிகை 112
அமர் 93
அமலை 60
அமைவு 79
அரவிந்த 85
அரசர் 27
அருசு 18
அரசுரை 44
அரும்பு 76
அலித்தல் 42
அலை 86
அழகு 72
அழுவுதலால் 128
அளித்து 99
அறம் 10
அறிவு 25
அடர் 43
அன்பாய் 104
அன்னம் 123
அன்னமயிலார் 128
ஆகூரன் 101
ஆங்கு 3
ஆசானக்கும் 102
ஆட்சி 36
ஆடகநீர் 55
ஆடல் 71
ஆடற் 107
ஆண்டர் 172
ஆரமலை 12

| | | | |
|---|---|---|---|
| ஆலத்தால் | 97 | இன்புறலார் | 20 |
| ஆவி | 129 | இறைஞ்சும் | 130 |
| ஆவினன்குடி | 32 | இறைவன் | 51 |
| ஆவுடையார் | 102 | இறைவனிடம் | 7 |
| ஆனந்தவள்ளி | 107 | இன்பம் | 102 |
| ஆன்மாவை | 87 | இனப்புலைச்சி | 38 |
| ஆனிலை | 35 | ஈசன் | 95 |
| இசைந்த | 33 | ஈன | |
| இசைவாள் | 26 | உஞ்சில் | 70 |
| இட்ட | 16 | உண்ணாமுலை | 40 |
| இப்புவியிற் | 19 | உதவி | 40 |
| இராமன் | 105 | உந்து | 56 |
| இருக்கு | 44 | உமயவள் | 79 |
| இரத்தினசபை | 52 | உலமே | 59 |
| இருப்பதால் | 51 | உலகோர் | 124 |
| இருமயிலை | 33 | உலகின்பால் | 16 |
| இருப்பாச்சி | 36 | உவமை வெண்பா | 1 |
| இமையோர் | 60 | உவரிமிகு | 68 |
| இலங்கை | 58 | உள்ளம்தால் | 79 |
| இலகுமலை | 16 | உள்ளலை | 4 |
| இளஞ்சி | 61 | உன்னிரவி | 124 |

| | | | |
|---|---|---|---|
| ஊர்களந்தையூர் | 5 | ஓட்டிவிக்கும் | 84 |
| ஊரர் | 33 | ஓடம் | 84 |
| எட்டு | 127 | கங்கை | 7 |
| எட்டெட்டு | 125 | கங்கரை | 71 |
| எண்ணிய | 8 | கங்கை கொண்டான் | 107 |
| எதிர் | 23 | கச்சூ | 48 |
| எந்த | 17 | கஞ்சநங்கை | 37 |
| எந்தை | 119 | கட்டழகி | 63 |
| எந்தையருள் | 2 | கடம்பவன் | 26 |
| எனச்சொல் | 21 | கடம்பூர் | 37 |
| என்பு | 59 | கடவனை | 17 |
| என்புலியூர் | 69 | கடவூர் | 86 |
| என்மயிலையே | 19 | கடனா | 14 |
| எனவும் | 14 | கண்டவர் | 43 |
| என்று | 124 | கண்டோர்க்கு | 40 |
| என்றே | 25 | கண்ணுதிலர் | 64 |
| ஏழு | 59 | கண்ணழகு | 17 |
| ஒற்றியூர் | 61 | கண்ணுவர் | 8 |
| ஒற்றுமை | 56 | கணம் | 56 |
| ஓங்கு | 3 | கணியும் | 109 |
| ஓசை | 113 | கணித்திடல் | 71 |

| | | | |
|---|---|---|---|
| கதி | 59 | கருது | 48 |
| கதிர் | 116 | கருந்தார் | 80 |
| கதிர்வேல் | 53 | கருவூர் | 35 |
| கந்தசாமி | 96 | கருவூரர் | 11 |
| கந்தன் | 117 | கருவைநல்லூர் | 19 |
| கபாலன் | 69 | கரை | 108 |
| கபாலீசுவரர் | 26 | கல் | 53 |
| கம்பைநதி | 112 | கல்யாண் | 116 |
| கம்பை | 47 | கலந்தறுக்கும் | 86 |
| கமம் | 120 | கலித்தீர்ப்பதால் | 72 |
| கமலம் | 123 | களிப்புறலால் | 64 |
| கமலை | 60 | கலையருக்கு86 | |
| கழுக்குன்று | 63 | கவன்பாற் | 27 |
| கமுறலர்ற் | 80 | கவிதை | 33 |
| கமுறல் | 80 | களவி | 19 |
| கயிலாயம் | 14 | களபழ் | 89 |
| கரவில் | 83 | கள்ளவனம் | 5 |
| கரிமுகனை | 27 | கள்ளவினை | 73 |
| கருணை | 43 | ஆளிப்பாற் | 14 |
| கருத்தன் | 6 | களிப்புறலாற் | 22 |
| கருத்து | 49 | கற்பகத்தாயாம் | 10 |

| | | | |
|---|---|---|---|
| கற்பகம் | 27 | காணப்பதிவு | 44 |
| கற்பகவல்லி | 13 | காணவரும் | 23 |
| கற்பகப்பூ | 53 | காணுதலால் | 24 |
| கற்றோரும் | 106 | காணுதலாப் | 7 |
| கன்னிகை | 59 | காத்த | 1 |
| கன்னியம் | 113 | காதல் | 71 |
| கன்னன் | 58 | காந்தை | 9 |
| கனத்தால் | 17 | காந்திமதி | 112 |
| கனதனத்தார் | 37 | காப்பாற்று | 99 |
| கயிலாயர் | 109 | காப்பு | 1 |
| காபுரி | 121 | காப்புகளின் | 25 |
| காசி | 57 | காமாட்சி | 47 |
| காசிமன்னன் | 13 | காமம் | 116 |
| காசுபடி | 90 | காமவல்லலி | 12 |
| காஞ்சி | 46 | காமானும் | 1 |
| காட்சி | 23 | காரி | 72 |
| காட்டுதல் | 58 | காவலவர் | 114 |
| காடன் | 77 | காவி | 129 |
| காண் | 37 | காவேரி | 37 |
| காண்பால் | 6 | காளத்தி | 55 |
| காண்பார்க்கும் | 19 | காளியர்கோன் | 29 |

| | | | |
|---|---|---|---|
| காளை | 22 | குளம் | 2 |
| கிருபை | 75 | குற்றால | 18 |
| கிள்ளை | 36 | குன்று | 28 |
| கீழ் | 3 | குன்றுதோர் | 116 |
| கீர்த்தி | 30 | கூடலுக்கு | 22 |
| குடமாஞ் | 117 | கூத்தன் | 1 |
| குடவலை | 86 | கூர்ப்பார் | 25 |
| குடியால் | 122 | கூர்தலினால் | 98 |
| குணத்தால் | 86 | கூரும் | 38 |
| குந்தமலி | 102 | கேட்போர் | 130 |
| கும்பகோணம் | 91 | கேதாரம் | 57 |
| கும்பமுனி | 122 | கைத்தொழலால் | 82 |
| கும்பமுலை | 1 | கைவளையும் | 47 |
| குயில்கள் | 50 | கைவேழம் | 50 |
| குயில் | 38 | கொங்காரும் | 54 |
| குரு | 3 | கொண்டதனால் | 28 |
| குருகாவூர் | 65 | கொண்டாடுதலால் | 22 |
| குலவுசித்தி | 27 | கொடுப்பதனால் | 23 |
| குலவு | 123 | கொடை | 42 |
| குலாவுதலால் | 20 | கொம்பு | 18 |
| குழவி | 80 | கொலை | 86 |

| | | | |
|---|---|---|---|
| கொள்கையால் | 29 | சமயம் | 79 |
| கொள்ளம்பூதூர் | 84 | சன்னதி | 121 |
| கொற்றம் | 15 | சனக்கு | 102 |
| கோதை | 76 | சாமி | 95 |
| கோமதி | 20 | சார்தலின் | 31 |
| கோயில் | 53 | சார்தலினால் | 7 |
| கோலமுறும் | 40 | சார்பானதி | 56 |
| கோணமும் | 93 | சாலை | 78 |
| சங்காழி | 54 | சிங்கண் | 39 |
| சங்கம் | 77 | சிங்கார | 22 |
| சங்கலத்தை | 33 | சித்திரம் | 107 |
| சசுரம் | 119 | சித்திரன் | 125 |
| சத்தம் | 4 | சித்தூர் | 75 |
| சத்த | 17 | சிந்தனை | 40 |
| சத்தி | 92 | சிந்து | 108 |
| சதத்தீர்கால் | 70 | சிந்தை | 114 |
| சந்தம் | 102 | சிரந்திடல் | 33 |
| சந்தாற் | 15 | சிரந்ததனால் | 15 |
| சந்திவினாயகம் | 110 | சிராப்பள்ளி | 78 |
| சம்பந்தன் | 18 | சிலம்பு | 39 |
| சம்பர் | 45 | சிவகங்கை | 24 |

| | | | |
|---|---|---|---|
| சிவசயிலமே | 17 | சூடு | 120 |
| சிவகாமி | 68 | சூழ் | 4 |
| சிவமௌலாற் | 18 | சூழ்ச்சி | 50 |
| சிவனாகம் | 105 | சூழ்ந்து | 80 |
| சிற்பரமாம் | 108 | சூழ்வேலை | 8 |
| சீர் | 68 | சூலாதரன் | 52 |
| சீர்ப்பால் | 16 | சூற்றுமலை | 118 |
| சீர்வசந்தன் | 15 | செங்கரம் | 124 |
| சீரார் | 33 | செங்கோல் | 76 |
| சீரால் | 8 | செட்டிமகள் | 63 |
| சீரசை | 20 | செஞ்சொல் | 33 |
| சீரிய | 31 | செந்தமிழன் | 113 |
| சுகம் | 130 | செந்தூரே | 4 |
| சுந்தரம் | 2 | செந்தூரன் | 3 |
| சுந்தரி | 119 | செப்புதல் | 59 |
| சுப்பரமணியம் | 116 | செம்புகை | 15 |
| சுமை | 93 | செம்பொன் | 64 |
| சுருதி | 83 | செய்து | 1 |
| சுவேதவன் | 77 | செயம் | 66 |
| சுழித்துள் | 21 | செயலாற் | 16 |
| சுழியால் | 21 | செல்லு | 28 |

| | |
|---|---|
| செல்வம் | 86 |
| செவ்வந்தி | 38 |
| செவியா | 3 |
| சென்னையும் | 95 |
| சேதுநகர் | 105 |
| சேய்ஞ்ஞலூர் | 99 |
| சேயவன்னி | 41 |
| சேர்வைதரும் | 8 |
| சேரலாற் | 11 |
| சேரின் | 16 |
| சேருதல் | 41 |
| சேவடி | 44 |
| சேவை | 104 |
| சேனவினை | 72 |
| சொர்புலவர் | 30 |
| சொல் | 61 |
| சொல்வளமும் | 4 |
| சொற்பெறலார் | 6 |
| தகுதி | 78 |
| தங்கு | 7 |
| தண்டலைகள் | 50 |
| தன்னுறை | 52 |
| தந்திமுகன் | 2 |
| தம்பி | 36 |
| தமிழ் | 114 |
| தமிழ்ப்பெறலாற் | 15 |
| தர்படு | 67 |
| தரு | 126 |
| தலம் | 61 |
| தலைமாந்திரு | 60 |
| தலைவர் | 81 |
| தவப்பேரெய்தும் | 130 |
| தழைத்திடல் | 113 |
| தளை | 7 |
| தன்னோர் | 14 |
| தன்மை | 21 |
| தன்மையிளனாற் | 5 |
| தனல் | 34 |
| தனுமதியும் | 7 |
| தாமரை | 129 |
| தாயாம் | 6 |
| தாயுங்கள் | 18 |

| | | | |
|---|---|---|---|
| தார் | 51 | திருவான்மியூர் | 62 |
| தாலம் | 13 | திருவிழிமிழலை | 190 |
| தானிருமை | 11 | திருவோத்தூர் | 45 |
| தாள் | 98 | திறை | 27 |
| தாளம் | 45 | தினகாணி | 31 |
| தானும் | 23 | தினம் | 62 |
| திங்களூர் | 97 | தீர்த்தம் | 3 |
| திசை | 123 | தீர்ந்ததுரை | 2 |
| திப்பாம் | 4 | துரை | 42 |
| திரிகூடம் | 18 | துணை | 21 |
| திருக்கெடில் | 144 | தூது | 85 |
| திருச்சிற்றம்பலம் | 70 | தூய | 41 |
| திருத்தணிகை | 53 | தெக்கனத்தில் | 109 |
| திருத்தும் | 6 | தெண்டைமான் | 46 |
| திருநகர் | 47 | தெற்குமுகம் | 8 |
| திருப்பா | 67 | தெற்கு | 8 |
| திருப்புலியூர் | 67 | தென்குமரி | 113 |
| திருமரைக்காடு | 100 | தென்பனுவல் | 59 |
| திரை | 125 | தென்பால் | 99 |
| தில்லை | 68 | தென்புகலூர் | 80 |
| திருவாரூர் | 85 | தென்பூவை | 12 |

| | | | |
|---|---|---|---|
| தென்மயிலாப்பூர் | 20 | நந்தி | 56 |
| தென்மருதலூர் | 82 | நம்பர் | 45 |
| தென்முசலை | 50 | நம்பள் | 47 |
| தென்றல் | 8 | நம்பி | 121 |
| தென்னாரூர் | 34 | நம்பினார்க்கு | 49 |
| தேகயமீபூ | 75 | நயத்தல் | 383 |
| தேசிகமாப்பிள்ளை | 115 | நல்குதல் | 124 |
| தேவர் | 126 | நல்குவதல் | 77 |
| தேவி | 92 | நல்லூர் | 93 |
| தேனகல் | 46 | நல்வேலை | 69 |
| தையல்நாயகி | 74 | நலந்தரல் | 55 |
| தையூர் | 5 | நவமயிலை | 127 |
| தொழில் | 80 | நள்கூழை | 20 |
| தோகை | 118 | நள்ளாறு | 79 |
| தோங்கும்முலை | 79 | நற்பணி | 101 |
| தோன்றுதல் | 41 | நன்மயிலே | 45 |
| தோனி | 72 | நன்மலை | 15 |
| நகர் | 12 | நன்னீர் | 14 |
| நகரி | 3 | நன்னுதல் | 123 |
| நடித்த | 50 | நாகம் | 20 |
| நதி | 41 | நாகமணி | 124 |

| | | | |
|---|---|---|---|
| நாகன் | 128 | நிகர் | 32 |
| நாகலை | 115 | நிடைமருதூர் | 89 |
| நாக முடியாடல் | 14 | நிடு | 28 |
| நாசகங்கை | 16 | நிரை | 12 |
| நாசி | 34 | நிரைவால் | 6 |
| நாடகம் | 69 | நிருத்தர் | 2 |
| நாடு | 15 | நிலத்தார் | 126 |
| நாடுதலால் | 2 | நிலவு | 125 |
| நாடி | 84 | நிலநிருத்து | 79 |
| நாதர் | 91 | நீதி | 75 |
| நாது | 79 | நீர் | 91 |
| நாமம் | 12 | நீர்கரை | 29 |
| நாமனும் | 1 | நீறுலகின் | 22 |
| நாமான் | 21 | நூல் | 96 |
| நாரும் | 64 | நெல் | 42 |
| நாலு | 123 | நெல்லை | 103 |
| நாவலர் | 90 | நெல்லைநகர் | 140 |
| நாவில் | 40 | நேசத்தால் | 89 |
| நாவு | 44 | நேசர் | 92 |
| நாளும் | 17 | நேர்மையினால் | 21 |
| நான்பாட | 1 | நேரமுதல் | 12 |

| | |
|---|---|
| நேரிடர் | 31 |
| நேரு | 127 |
| நேவிய | 90 |
| நேனார் | 35 |
| பக்கமுறலாற் | 19 |
| பகுத்து | 109 |
| பகுப்பதனால் | 70 |
| பகை | 114 |
| பங்கையன் | 32 |
| பச்சை | 6 |
| பசும்பூசை | 94 |
| பஞ்சவளம் | 25 |
| பஞ்சாகரம் | 70 |
| பட்டிச்சுரம் | 94 |
| படிவம் | 441 |
| பண்பால் | 19 |
| பண்பு | 56 |
| பணமாம் | 57 |
| பணி | 51 |
| பணியால் | 92 |
| பத்திமுற்றும் | 92 |
| பத்து | 109 |
| பதி | 83 |
| பதிகம் | 40 |
| பதிகவிசை | 76 |
| பதிகுலம் | 40 |
| பதிப்போர் | 130 |
| பயிலுவதால் | 50 |
| பயிலை | 95 |
| பரமானந்த | 71 |
| பரவுநலம் | 13 |
| பரவை | 85 |
| பரிவு | 55 |
| பருதிகுல | 105 |
| பல்லக்கு | 42 |
| பலர்புகழும் | 16 |
| பலன் | 61 |
| பழுகு | 75 |
| பழமுதிர்சோலை | 30 |
| பழனி | 32 |
| பன்பால் | 60 |
| பன்னிரெண்டு | 124 |

| | |
|---|---|
| பன்னவனாம் | 124 |
| பனந்தால் | 98 |
| பனியால் | 8 |
| பனிவதனால் | 39 |
| பாகம் | 69 |
| பாகமெல்லாம் | 20 |
| பாகிசை | 101 |
| பாசூர் | 51 |
| பாஞ்சார் | 57 |
| பாடவரும் | 43 |
| பாடி | 10 |
| பாண்டியன் | 2 |
| பாத்தூர் | 64 |
| பாதம் | 51 |
| பாதை | 70 |
| பாம்பு | 2 |
| பாய்மாய்33 | |
| பார் | 25 |
| பார்கடல் | 128 |
| பாரதி | 123 |
| பால் | 99 |
| பாலம் | 73 |
| பாலர் | 120 |
| பாலன் | 95 |
| பால | 27 |
| பாலூரலால் | 9 |
| பாவணந்தம் | 23 |
| பாவலர் | 48 |
| பாவர் | 27 |
| பாவின் | 44 |
| பாவுதல் | 76 |
| பாவைமுகம் | 3 |
| பாற்கடல் | 122 |
| பாற்றுகும் | 11 |
| பான்மை | 88 |
| பிவ்கிருடி | 57 |
| பிரம்மா | 123 |
| பிரம்மை | 14 |
| பிள்ளை | 84 |
| பின்னாம் | 33 |
| பிணியகற்றும் | 36 |
| புகழ் | 35 |

| | | | |
|---|---|---|---|
| புகழ்ந்து | 31 | புன்னை | 95 |
| புகன் | 32 | புன்னையில் | 4 |
| புங்கண்ணி | 11 | புன்னைவளர் | 67 |
| புகல் | 101 | புன்னயும் | 18 |
| புட்கரனி | 3 | புனர் | 53 |
| புடைமருதூர் | 11 | புலைநீர் | 24 |
| புண்ணியனைப் | 1 | புனைவளத்தாள் | 3 |
| புணவாயில் | 103 | புனை | 6 |
| புத்தர் | 84 | பூடுதல் | 66 |
| புத்தின் | 118 | பூங்கோதை | 55 |
| புத்தூர் | 24 | பூங்கடம்பன் | 54 |
| புதிய | 118 | பூங்கதிர்வேல் | 73 |
| புரியம்மையூர் | 13 | பூசத்தான் | 89 |
| புரிவர் | 21 | பூசுரர் | 87 |
| புலி | 69 | பூசை | 92 |
| புதுனம் | 127 | பூணு | 72 |
| புவி | 554 | பூணுதலால் | 21 |
| புவியிற் | 15 | பூணுவன்னி | 23 |
| புள்ளிமயில் | 73 | பூத்தலால் | 72 |
| புற்று | 62 | பூத்தனாற் | 23 |
| புன்னாகம் | 59 | பூந்துரை | 109 |

| | | | |
|---|---|---|---|
| பூம்பதனால் | 111 | பெற்புனல் | 48 |
| பூம்பாவை | 48 | பெறலாம் | 26 |
| பூமகள் | 1 | பெறுவார் | 130 |
| பூமயில் | 20 | பென்னினல்லாள் | 63 |
| பூவிரி | 96 | பேச்சி | 36 |
| பூவார்ந்தம் | 15 | பேணுமிசை | 23 |
| பூவுலகு | 126 | பேதை | 36 |
| பூவேய்யும் | 39 | பேராவான் | 38 |
| பூவை | 112 | பேராறு | 64 |
| பூவுலகில் | 48 | மைம்புனல் | 94 |
| பூண்துருத்தி | 101 | பொதிகைமலை | 10 |
| பெருங்காட்சி | 25 | பொய்யிலார் | 6 |
| பெண் | 26 | பொருந்து | 10 |
| பெண்காணுதல் | 69 | பொருள் | 45 |
| பெண்கொடுக்கும் | 45 | பொலிவு | 76 |
| பெண்ணிசை | 38 | பொற்பூ | 73 |
| பெண்மணம் | 43 | பொன் கொடுக்கும் | 88 |
| பெண்வடிவு | 8 | பொன்மலையின் | 15 |
| பெரியநாயகி | 41 | பொன்னி | 77 |
| பெரியவள் | 14 | பொன்னியங்கல் | 95 |
| பெருமை | 24 | போகம் | 79 |

| | | | |
|---|---|---|---|
| போதாயினர் | 8 | மணதிகிரி | 56 |
| போமான் | 63 | மணல் | 41 |
| போலுமுரும் | 23 | மணி | 28 |
| போவனூர் | 49 | மணிநிரை | 87 |
| போற்றி | 1 | மணியாலான் | 70 |
| போற்று | 57 | மதி | 64 |
| போற்றும் | 13 | மதில் | 84 |
| போற்றுவதால் | 54 | மதலை | 34 |
| மங்காத | 54 | மந்தரங்கநாடு | 108 |
| மகிமையினால் | 20 | மந்திரத்தின் | 78 |
| மகிழ்ந்திடல் | 34 | மயிலாடுதுறை | 75 |
| மகிழ்மயிலை | 1 | மயிலாபுரி | 14 |
| மங்களநீர் | 106 | மயிலாப்பூர் | 13 |
| மங்கை | 32 | மயிலீசர் | 111 |
| மஞ்சார் | 70 | மயிலூர் | 117 |
| மடமயில் | 117 | மயிலை | 17 |
| மடிமதலை | 81 | மயிலைநகர் | 12 |
| மண் | 114 | மயிலையூர் | 5 |
| மணம் | 116 | மயிலீசர் | 122 |
| மண்டபம் | 70 | மயேந்திமலை | 120 |
| மண்ணுயிர் | 82 | மரகத்தாய் | 13 |

| | | | |
|---|---|---|---|
| மருதம் | 126 | மாதர் | 32 |
| மருமை | 76 | மாது | 91 |
| மருகு | 30 | மாமயல்வன் | 4 |
| மருமையால் | 43 | மாமாட்சி | 47 |
| மருவி | 9 | மாமனி | 88 |
| மருவு | 6 | மாமுனிவர் | 100 |
| மருவுதலால் | 18 | மாயவனார் | 120 |
| மலை | 38 | மால் | 78 |
| மறைசூம் | 44 | மால்வரை | 4 |
| மனிகதிர் | 9 | மாலிசைந்த | 46 |
| மன்னர் | 44 | மாலை | 21 |
| மன்னும் | 120 | மாலையனன் | 40 |
| மன்னுமதில் | 5 | மாவலர் | 90 |
| மாசிலாமணி | 28 | மாவின் | 127 |
| மாடம் | 65 | மான் | 54 |
| மாடமதுரை | 29 | மான்பு | 42 |
| மாண்டவரை | 97 | மானதியாம் | 22 |
| மாணவர் | 103 | மானிலத்து | 106 |
| மாணிக்கம் | 102 | மின்னாகம் | 122 |
| மார்த்தாண்டனுக்கு | 5 | மின்னும் | 77 |
| மாத்தூர் | 64 | மீறுகின்ற | 21 |

| | | | |
|---|---|---|---|
| மீனுரும் | 31 | மூவர் | 114 |
| மீனாட்சி | 27 | மெச்சிய | 48 |
| முக்குளம் | 77 | மெய் | 43 |
| முகம் | 71 | மெய்ப்பொருள் | 49 |
| முகவாய் | 28 | மெய்விளங்கும் | 5 |
| முட்குதிரை | 3 | மெல்லினை | 68 |
| முடங்கல் | 51 | மேகம் | 91 |
| முத்தம் | 66 | மேல்பாலனும் | 12 |
| முத்தருட்சம் | 42 | மேவரிய | 92 |
| முத்தழகு | 74 | மேவு | 12 |
| முத்தி | 17 | மேசுகம் | 32 |
| முதுமை | 51 | மேற்கீழ் | 10 |
| முரசம் | 36 | மேற்படலாய் | 5 |
| முருகனார் | 80 | மேன்மை | 50 |
| முல்லையன் | 110 | மேன்மையதால் | 2 |
| முழுக்குன்று | 63 | மோகம் | 91 |
| முற்றிடல் | 33 | மோதக்கடல் | 36 |
| முற்று | 16 | வகிரவாகம் | 120 |
| முன்னி | 14 | வங்கமலையார் | 100 |
| முனியன் | 62 | வஞ்சியுரை | 37 |
| மூவந்தனார் | 48 | வட்டம் | 125 |

| | | | |
|---|---|---|---|
| வடிவார் | 22 | வழங்கும் | 17 |
| வடிவுடையதாய் | 9 | வழங்குதல் | 34 |
| வடிவிசை | 54 | வழித்துணை | 65 |
| வடிவிலரி | 20 | வழிபடல் | 83 |
| வண்டார் குழல் | 52 | வழிபடுவோர் | 97 |
| வண்டு | 82 | வழிபாடு | 21 |
| வண்ணம் | 95 | வள்ளல் | 73 |
| வண்மை | 42 | வள்ளார் | 130 |
| வணங்கியருள் | 22 | வள்ளி | 116 |
| வணங்கும் | 21 | வள்ளியருள் | 103 |
| வணிகன்மகள் | 82 | வள்ளுவரின் | 54 |
| வந்தனை | 9 | வளம் | 95 |
| வந்ததால் | 4 | வளத்தாள் | 10 |
| வரகுணர் | 89 | வளர்கபாலீசர் | 19 |
| வரத்தால் | 81 | வளர்தல் | 51 |
| வரிசை | 85 | வளர்ப்பதனால் | 64 |
| வல்லி | 53 | வளைச்சுரமும் | 7 |
| வலஞ்சுழி | 95 | வளைத்தார் | 60 |
| வலமாய் | 60 | வன்தொண்டர் | 43 |
| வலைவு | 98 | வன்மீன் | 34 |
| வாழ் | 20 | வன்னி | 111 |

| | | | |
|---|---|---|---|
| வாகீசர் | 101 | விடங்கன் | 85 |
| வாங்கு | 21 | விடநாகம் | 93 |
| வாசிப்போர் | 130 | விண்டு | 50 |
| வாட்கப்பெண் | 74 | விணை | 77 |
| வாய்த்த | 4 | விதி | 7 |
| வாய்த்தவர் | 22 | விந்தை | 107 |
| வாய்ப்பாற் | 13 | விப்பிரன் | 100 |
| வாய்பால் | 106 | விம்பர்த்தனை | 47 |
| வாய்ப்பாபன் | 65 | விம்புதல் | 58 |
| வாய்மை | 89 | விமானம் | 26 |
| வாய்மொழி | 18 | வியப்பாற் | 37 |
| வாயில் | 50 | வியப்பினால் | 13 |
| வாயிலர் | 42 | வியன்மயிலை | 2 |
| வாயிலார்க்கு | 4 | விரங்கு | 35 |
| வாயே | 9 | விரதிநதி | 11 |
| வாரணம் | 117 | விரும்பு | 2 |
| வாரி | 83 | விரும்புதல் | 129 |
| வாழ்க்கை | 37 | விலங்கியதால் | 48 |
| வாழ்த்து | 50 | விள்ளு | 4 |
| வான்கலை | 125 | விளையாட்டு | 58 |
| வானுதல் | 82 | விண்பா | 104 |

| | | | |
|---|---|---|---|
| வின்னுலகம் | 126 | வேண்டுதலால் | 2 |
| விநாயகனும் | 1 | வேணுபுரத்தவர் | 94 |
| வீசுதலல் | 32 | வேதமுறை | 63 |
| வீரம் | 5 | வேந்தர் | 34 |
| வினைமுற்றே | 35 | வேல்கதை | 59 |
| வெண்பா | 130 | வேலவர் | 99 |
| வெயில் | 124 | வேலின் | 30 |
| வேற்பு | 41 | வேலூர் | 97 |
| வேங்கடம் | 54 | வேழம் | 55 |
| வேங்கடத்து | 9 | வேளாள | 52 |
| வேங்கோன் | 127 | வேளை | 22 |
| வேடன் | 49 | வேள்தாள் | 3 |
| வேண்டுதல் | 90 | வேனில் | 94 |
| | | வைகை | 30 |

## துணைநூற்பட்டியல்


| | |
|---|---|
| அருள்மிகு சிவசக்தி திருத்தலங்கள் | ஏ.எஸ். வழித்துணை ராமன்,<br>பாரதி பதிப்பகம்,<br>108 உஸ்மான் சாலை,<br>தியாகராயர் நகர்,<br>சென்னை -600 017 |
| தமிழ் இலக்கிய வரலாறு | தமிழண்ணல் |
| ஆசிரியர் குழு | சுவடிப்பதிப்புத்திறன்<br>தொகுதி-1,<br>உலகத்தமிழாராய்ச்சி<br>நிறுவனம்<br>சி.ஐ.டி. வளாகம்<br>தரமணி,<br>சென்னை - 600 113 |